**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

**E.A.No.4/2024 in E.P.No.29/2019in O.S.No.355/1979** தேதி-18.06.2026

(PW.1) – ஸ்ரீகுமார்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

1. E.A.No.4/2024 ல் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனுவின் மூலம் மூன்று ஆவணங்களுக்கான Ex.P9 to Ex.P11 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.355/1979 மற்றும் நிறைவேற்று மனு எண்.29/2019 ல் நான் கட்சி இல்லை என்றால்சரிதான். இந்த சொத்தின் உரிமையாளர் நான் இல்லை என்றால் சரிதான், பொது அதிகாரம் ஆவணத்தின் மூலம் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு பொது அதிகாரம் வழங்கி நபர் எதற்காகஎனக்கு அதிகாரம் வழங்கியுள்ளார் என்றால் ராஜதுரை வெளிநாட்டில் இருப்பதால் அவருடைய சொத்துக்களை பராமரிப்பதற்காக எனக்கு பொது அதிகாரம் வழங்கியுள்ளார்.

2. அசல் வழக்கை பற்றியோ, நிறைவேற்று மனுவை பற்றியோ எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பொது அதிகாரம் வழங்கிய ராஜதுரை சொல்லி தந்ததன் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேனே என்றால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இந்த மனுவில் தாக்கல் செய்துள்ள Ex.P9 to Ex.P11 மூன்று ஆவணங்களிலும் ராஜதுரைக்கு உரிமைப்பட்டது சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, சொல்லப்பட்டுள்ளது.

3. மேற்சொன்ன ஆவணங்களில் எங்குமே ராஜதுரையை பற்றியோ, அவருக்கான உரிமையை பற்றியோ குறிப்பிடப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணமானது சிங்கராஜன் என்பவர் வாதியாகவும், தற்போது வரை சுமார் 180 க்கும் அதிகமான பிரதிவாதிகள் உள்ள வழக்காகும் என்றால் அதை பற்றி தெரியாது. E.A.No.4/2024 ஐ எந்த பரிகாரம் கேட்டு நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் சொத்தை எடுக்கக்கூடாது சொல்லி நாங்கள் தாக்கல் செய்தோம்.

4. இந்த மனுவானது மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம், மதுரை கிளை வழங்கி உத்தரவின் பேரில் தான் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனுவில் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் கிடைக்கப்பெற்ற ஆணையில் 28.02.2020 அன்று மேற்படி சொத்தை நீதிமன்ற மூலம் கைமாற்றம் எடுத்து மேற்படி நிறைவேற்று மனு எண்.29/2019 என்ற மனு முடிக்கப்பட்ட பிறகு இந்நீதிமன்றத்தில் Obstruction மனு தாக்கல் செய்யப்பட்டு அது திருப்பப்பட்டதாக என்று கூறி தான் ஆணை பெறப்பட்டது என்றால் சரிதான்.

5. மூன்று ஆவணங்களில் திருத்தப்பட்ட சர்வே எண் பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வழக்கின் தரப்பினராகவோ, அல்லது எதிர் மனுதாரராகவோ இல்லாத நிலையில் மூன்று தரப்பினரால் தீர்ப்பாணையை சரிசெய்ய இயலாது என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் திருத்தம் செய்வதற்கான மனு தாக்கல் செய்தேன் என்றால் விலைக்கு வாங்கியதன் அடிப்படையில் திருத்தம் செய்வதற்கான மனு தாக்கல் செய்தேன்.

6. ராஜதுரை வாங்கியதாக சொல்லப்படும் சொத்தின் விஸ்தீரணம்1.944 சென்ட் சொத்து என்றால் ஆவணத்தில் 2 சென்ட் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் யாரிடம் வாங்கினோமா, அந்த வாங்கப்பட்ட நபரை பொறுத்தவரையில் அந்த ஜென்மிக்கு இந்த சொத்தில் உரிமையில்லை என்றால் சரியல்ல. ஏன் என்று சொன்னால் அவர் இந்த சொத்தை நீதிமன்றம் மூலமாக நிறைவேற்றுகை மனு தாக்கல்செய்து ஒழிப்பித்து, சொத்தை கைவசம் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 5 ஏக்கருக்கு அதிகமாக சொத்துக்கள் சர்வே எண்ணில் உள்ளது என்று அசல் வழக்கு எண்.355/1979 என்ற வழக்கில் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், ராஜதுரை வாங்கியதாக சொல்லப்படும் சொத்து அதே சர்வே எண்ணில் வேறு ஏதாவது சொத்தாக இருக்கலாம் என்றால் சரியல்ல.

7. இந்த மனுவின் எதிர்மனுதாரர் நீதிமன்ற அமீனா மூலம் ஒழிப்பித்து எடுக்க முயற்சி செய்த போது நானும், என் நண்பர்களும் சேர்ந்து தடைசெய்ததால் கருங்கல் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டு, அதில் நான் எதிரியாகவும், மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம், மதுரை கிளையின் ஆணையின் மூலமே

இந்த வழக்கு பட்டிகை சொத்தை எதிர் மனுதாரர்கள் ஒழிப்பித்து கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

8. ஒரு முறை முடிவு செய்த மனுவை மீண்டும் விசாரணை செய்ய மனு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. மேற்சொன்ன Ex.P9 to Ex.P11 வரையுள்ள ஆவணங்கள் மூலம் எங்களுக்கு உரிமைப்பட்டதல்ல என்றாலும், அதனுடைய ஜென்மிகள் தான் மேற்சொன்ன ஆவணங்களை தாக்கல் செய்ய முடியும் என்றால் சரியல்ல. இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும், மேற்சொன்ன ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றாலும், தீர்ப்பாணையில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்ணும், மனுவில் திருத்தப்பட்ட சர்வே எண்ணும் வெவ்வேறு என்றாலும் சரியல்ல. இந்த மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.